**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, ERANIEL**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973/Chapter XXV of BNSS 2023, and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**C.C.No.123/2015 P.W.8 /LW11**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | திருமதி. ஜானகி (காவல் ஆய்வாளர்) | | | |
| **Father's Name** | : | க/பெ. | **Calling** | : | |
| **Village** | : | | **Religion** | : | |
| **Taluk** | : | | **Age** | : | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 23.04.2025**

**அரசுத்தரப்பு முதல் விசாரணை** :

**2 வது குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஆஜரில்லை. மேற்படி ஆஜரின்மை நீதியின் நலன் கருதி கு.வி.மு.ச 1973 பிரிவு 317(1)ன் கீழ் அனுமதிக்கப்படுகிறது. 1 வது குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஆஜர். குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்**

1. நான் தற்போது கொல்லங்கோடு காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணி புரிந்து வருகிறேன். இதற்கு முன்பு குளச்சல் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் ஆய்வாளராக பணிபுரிந்த போது மாண்புமிகு குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், இரணியல் Crl.M.P.No.6924/2013 ன் படி பதிவு செய்த இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கையை நான் எனது விசாரணைக்கு எடுத்துக் கொண்டேன்.

2. நான் இவ்வழக்கின் சாட்சிகளான சேதுனி, செல்லம்மாள், ஜெஸ்டின், வினு , மைக்கேல் அடிமை, பிராங்கிளின், ஷிலா, சித்ரா, மரியதங்கம் ஆகியோர்களை தனி தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். காவல் உதவி ஆய்வாளர் சத்தியவானி முத்துவையும் விசாரித்து இத்துடன் எனது விசாரணையை முடித்து வழக்கின் சம்பவம் உண்மை என தெரிய வந்ததால் குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் 1 மற்றும் 2 மீது மட்டும் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன். மற்ற குற்றம் தாக்கல் செய்யப்பட்டவர்கள் மீது குற்ற சாட்டுக்கான முகாந்திரம் இல்லாததால் அவர்களை வழக்கில் இருந்து நீக்கம் செய்தேன்.

**குறுக்கு விசாரணை** :_

குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்யாததால் குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

நீதித்துறை நடுவர் ,

இரணியல்.